**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஆறுமுகனார் தீட்சையின் போது (14-07-2019) அவர் உரைத்த உபதேசம்

மானுடரே!

அகமது செம்மையுற ஆனந்தம் அருளிடுவோம். அகம் புறம் அறிந்து உணர்ந்தால், இகம், பரம் இணைந்திருக்கும். வினைகள் பல களைந்திடவே விடைகள் பல சித்திக்கும். கலைகள் யாவும் பல உண்டு. உள்ளும் புறமும் நிலைப்பது உண்டு.

அஷ்ட சித்திகளும் உட்கலையாம், ஆயகலைகளும் வெளிகலைகளாம். அஷ்டத்தின் வர்க்கமே ஆயகலை. ஆயத்தின் மூலமே அஷ்டம் ஆகும்.

எண்களும், எழுத்துக்களும் இணைந்திட்டால் அறிவும், ஞானமும் ஒருங்கிணையும், கண்களும் ஒளியினை ஏற்றிட்டால் உடலும் உயிரும் ஒருங்கிணையும். உயிரினை உணர்ந்திடவே மார்க்கங்கள் பல உண்டு. உள் மார்க்கம் ஞான மார்க்கம், வெளிமார்க்கம் அறிவின் மார்க்கம்.

உட்பயணம் துவங்கிடவே தீட்சை அன்றோ துணைபுரியும். தீ வினைகள் களைந்திட்டால் உயிரின் ஒளியும் புலப்படுமே. ஞானத்தின் உச்சமெனும் பரமனை நீ அடைந்திட்டால், கருணை எனும் வெள்ளமது பெருகிடவே கண்டிடுவாய்.

மானுடனே! மானுடனே!

மதி மயக்கம் கொள்ளாதே!

மாயை தனில் வீழாதே!

மரணம் அதைத் தழுவாதே!

கனிவுடனே உரைக்கின்றோம்!

கரை சேர்ந்திட அருள்கின்றோம்.

உள் விழிகள் மலர்த்திடு. உயிரினை உணர்ந்திடு. தடைகள் என வீற்றுள்ள திரைகளையே நீக்கிவிடு.

வினைகள் யாவும் பதிந்திட்ட விழி திரைகள் ஆறு உண்டு. ஆறுமுகா தீட்சை ஒன்றே ஆகமத்தை உணர்த்திவிடும். சூடேற்றிக் குளிர்வித்தால் சிந்தனைகள் மாறுபடும். சீரான வழித்தடமோ சிவம் அதனை ஏற்றுவிடும். சிவமான உயிரினையே சித்தமதில் நிலை நிறுத்தி செருக்ககற்றி மெருகேற்றிட செழுமையுறும் ஆன்மாவே.

ஆன்மாவும் செழுமையுற்றால் செங்கதிரோன் மகிழ்ந்திடுவான். இறையாற்றல் அளித்திடுவான். பரகதியும் நல்கிடுவான். பரகதியை ஏற்றிடவே பற்றற்று நிலைத்து விடு. பரமன் அவன் தாழ் பணிந்து பரஉலகம் சென்றுவிடு. பெரு நிலைகள் எய்திவிட பிறவா வரம் தனையே பெற்றிடுவாய்.

பிறவாத நிலை கண்டிட பிரம்மத்தை உணர்ந்து விடு. ஆதியும், அந்தமும் அற்றநிலை ஏற்றுவிடு.

வெற்றிடமே பிறப்பிடமாம்

வீடுபேறு தந்திடுமாம்

வினைகள் யாவும் உருகுலைய

வெற்றிடமும் புலப்படுமாம்.

அச்சமதை துறந்து விடு

ஆணவத்தை அழித்துவிடு.

இச்சை தனை புறக்கணித்தால்

ஈசன் அருள் பெற்றிடுவாய்.

மாய, கர்ம வினைகள் யாவும்

திசை தனையே திருத்திவிடும்

இருளினிலே மூழ்கி நின்றால்

அசுரர்களே ஆட்கொள்வர்

காலமது கடந்து விட்டால்

கரைகளும் புலப்படாது.

வீண் என்றே வாழ்ந்திருந்தால்

உள் உலகம் ஒளிர்ந்திடாது.

வித்தைகளைக் கற்றறிவாய்.

வீரியமாய் இயங்கிடுவாய்

ஆறு திரை விலக்கிடுவாய்

ஆன்மாவை உணர்ந்திடுவாய்

ஆறு திரை விலகி நின்றால்

உருகிடுமாம் ஏழாம் திரை

உணர்வு நிலை பெருகி நின்றால்

உயிர்க் கூடும் களைந்திடுமாம்.

நஞ்சுகளை அகற்றிடுவாய்

நல் ஆற்றல் பெருக்கிடுவாய்

உட் கதவு திறவு கொண்டால்

ஒளிரூபம் கண்டிடலாம்

உட்செவிகள் திறவு கொண்டால்

ஓங்காரம் கேட்டிடலாம்.

உள் நாசி திறவு கொண்டால்

உயிரினையே நுகர்ந்திடலாம்

உள் நாவும் திறவு கொண்டால்

அமிர்தம் தனை சுவைத்திடலாம்

மூலம் அதனை உணர்ந்து கொள்வாய்

துவாரம் அதனை திறவு கொள்வாய்

பயணம் தனை மேற்கொள்வாய்

பண்பட்ட நிலை எய்திடுவாய்

ஓர் அறிவாய், ஈர் அறிவாய்

படி நிலையில் உயர்ந்திட்டாய்

ஆறறிவாய் மலர்ந்திட்டாய்

ஆக்கமுற செயல் புரிவாய்

மானுடனே! மதி மயக்கம் கொள்ளாதே!

மெய்மையும், பொய்மையும் இருவேறு நிலை ஆகும்.

மானுடராய் பிறந்தது ஒன்றே உயர்வு என்று கருதிவிடு.

பொய்மையாம் 'மாயை' யில் சிக்குண்டால்

பிறவா பெருநிலைதனை பெற்றுவிட இயலாது

புல்லாய் பிறவி கண்டாய்

விருட்சமாய் வளர்ந்து நின்றாய்

புழுவாய் பிறவி கண்டாய்

விலங்காய் உயர்ந்து நின்றாய்

மானுடனாய் பிறவி கொண்டாய்

தெய்வமாய் உயர்ந்துவிட முயன்றுவிடு

புல் இனத்தின் உயர்வு நிலை விருட்சம் ஆகும்.

புழுவினத்தின் உயர்வு நிலை விலங்கினம் ஆகும்.

மனிதன் என பிறவி கொண்டால்

நிலைகள் பல உயர்வடையும்

தெய்வநிலை அடைவதொன்றே மானுட

வாழ்வில் உயர்வு நிலையாவும்.

ஓர் அறிவின் உச்சமது மூவறிவு

மூவறிவின் உச்சமது ஆறறிவு

ஆறறிவின் உச்சமது ஒன்பது அறிவு

நவம் அதனைக் கடந்து விட்டால் தசமாகும்.

அறிவு நிலை கடந்து விட்டால் ஞானம் ஆகும். உயர் நிலைகள் அடைந்த விட அறிவினைத் துறந்துவிடல் வேண்டும். ஆராய்ந்திடும் அறிவே ஒன்பது படி நிலைகளை கடந்து விட உதவிடும. எனினும, ஆராய்தலுக்கு அப்பாற்பட்ட "ஞானம்" ஒன்றே இறைநிலையை உணர்த்தி விடும். இறைவனை அடைவதொன்றே உயிர்களின் இலக்காகும்.

உயிரினை அடைவதொன்றே அறிவின் இலக்காக அமைந்திடல் வேண்டும். அறிவின் உச்சம் ஞானத்தின் துவக்கமாகும். மானுடர்கள் பல பிறவிகளாய் வாழ்ந்து மடிவது அறிவின் உச்சத்தனை அடைந்திடவே என்பதனை உணர வேண்டும்.

அறிவின் உச்சம் சென்றிடும் தருணம் வரை ஆராய்ந்தே செயல்பட வேண்டும். அறிவினைக் கடந்து 'ஞானம்' அதைத் தழுவிடும் தருணம் ஆராய்தலை ஒதுக்கிட வேண்டும். கலியுக எல்லையிலே வாழ்கின்ற மானுடர்கள் அறிவின் உச்சத்தினை அடைந்தாலும் ஞானத்தின் துவக்கத்தினை ஏற்க மறுக்கின்றனர்.

அறிவினைப் பெற்றுவிட உருவம் வேண்டும். ஞானத்தைப் உணர்ந்து விட அருவ நிலை வேண்டும். எத்தருணத்தில் அறிவினைக் கடக்க இயல்கின்றதோ அத்தருணமே உருவ நிலைகள் யாவும் கடந்துவிடும்.

அறிவு மார்க்கத்தில் விழிகளுக்குப் புலப்படும் நிலைகளே உதவிபுரியும். ஞான மார்க்கத்தில் விழிகளுக்குப் புலப்படாத ஆற்றல்களே உதவி நின்றிடும். உருவமே அறிவு எனில் அருவமே 'ஞானம்' ஆகும். விழிகளுக்குப் புலப்படும் யாவுமே வெளித் தோற்றங்கள் ஆகும். மனிதனாய் பிறவி கண்டால் வெளி நிகழ்வுகளே விழிகளுக்குப் புலப்படும்.

பிற மானிடர்களைக் காண்பது போன்று தன் உருவினையே காண இயலாது. தனது விழிகளைக் காண்பதற்கும் ஒரு கருவியே துணை புரிய வேண்டும். விழிகளே அனைத்தினையும் காண்பதற்கு துணைபுரியும். ஆனால் விழிகளைக் காண்பது இயலாத செயலாகும். அவ்விதமே உயிர் ஒன்றே ஈசனைக் காணவும் உதவிடும் எனினும் உயிரினைக் காண இயலாது.

விழிகளைக் கண்டிட துணை புரியும் கருவியே அறிவு என்று உணர்க. அக்கருவியினால் விழிகளைக் கண்டிட இயலுமே அன்றி உயிரினைக் காண இயலாது. உள்முகப் பயணம் புரிந்திட விழிகளே உதவிடும் எனினும் உள் விழிகளை உணர்ந்திட ஞானமே உதவிடும்.

கலியுகம் தனிலே மானுடர்களின் வெளிப்பார்வை பாதிப்புறும் இத்தருணத்தில் உட்பார்வை என்பது தெளிவுற வேண்டுமெனில் தீட்சையானது மிகவும் அவசியம்.

எவ்விதம் உள் விழிகள் திறவு கொள்ளும்? தீட்சையானது எவ்விதம் உதவிடும்? உயிரின் ஆற்றல் என்பது கணித்திட இயலாதது. ஆன்மத் துகள்கள் யாவும் ஒளி ரூபம் கொண்டவை. அவ்வொளியானது மனிதர்கள் மற்றும் அனைத்து உயிர் இனங்களிலும் பரவியே காணப்படுகின்றது.

ஒளியினை உமிழ்கின்ற ஆன்மாவினை ஒளியற்ற விழிகளால் காண இயலாது. விழிகள் என்பவை உயிரின் ஒளியினை காண்கின்ற கருவிகள் ஆகும். எனில் ஒளியற்ற விழிகளும் உண்டோ என்றே சிந்தித்திடல் வேண்டும். உயிரின் ஒளி என்றும் குன்றாது. அதனை ஒத்தே காண்கின்ற கருவியான விழிகளின் தன்மையும் என்றும் குன்றாது.

கலியுகம் தனிலே நஞ்சுகள் யாவும் அமிலக் கழிவுகளாகப் பெருகி நின்றிடும் காரணத்தினால் திரைகள் எனும் தடைகள் தோன்றுகின்றன.

விழிகளின் ஒளியும், உயிரின் ஒளியும் ஒன்றிணைய வேண்டும். ஒளியும், இருளும் கலப்புக் கொண்டால் இருளானது மறைந்துவிடும். ஒளியும், ஒளியும் கலப்பு கொண்டால் ஒளியானது உச்ச நிலை எய்திவிடும். பரமாத்மாவின் ஓர் துளியே உயிர் எனின் உயிரின் ஓர் துளியே விழித்துகள் ஆகும்.

விழித் துகள்களின் ஒளி கொண்டு உயிர்த் துகள்களின் ஒளியை உணர்ந்திட வேண்டும். உயிர்த் துகளின் ஒளிக் கொண்டு பரமாத்மாவினை உணர்ந்திடல் வேண்டும்.

பரமாத்மாவின் ஒளி கொண்டே பரவெளியினையும் உணர்ந்திட வேண்டும். 'மாயை' என்பது எவ்விதம் செயலாற்றுகிறது என்பதை சிந்தனை புரிந்தே உணர்ந்திடுங்கள். வெளிப் பார்வையின் மூலம் காண்கின்ற ஆகாயமே வெட்ட வெளி என்றே ஏற்கின்றனர். மானிடர்கள் ஒளிப்பிழம்பாய் காட்சி தரும் சூரியனே 'பரமன்' என்றும் ஏற்கின்றனர்.

எனினும் இவையாவும் மறைபொருளையே உணர்ந்துகின்றன. வெளிவிழிகள் கொண்டு மாயப்பாதைதனில் பயணித்திடல் ஆகாது. அறிவினைத் துறந்து 'ஞானம்' தனை ஏற்றிடல் வேண்டும். சிந்தித்து அறிய இயலாத ஒரு நிலையே ஞானம் ஆகும்.

வெளிவிழிகள் கொண்டு அறிவின் துணை கொண்டு பயணித்திட்டால் புலப்படுகின்ற யாவுமே உயர்நிலைகள் என்று தோன்றிடும். அவை யாவும் 'மாயை' என்றே உணருங்கள்.

உள்விழிகளின் மூலம் 'ஞானம்' எனும் பாதையில் பயணித்து உயிரினை அடைந்து அதன் துணைக் கொண்டு பரவெளியினை அடைவதே சத்திய மார்க்கம் ஆகும். ஞானம் என்பது அறிவினைத் துறந்தால் கிட்டிடும்.

ஏன் அறிவினைத் துறக்க வேண்டும் என்றே சிந்திக்கும் மானிடர்களே அறிவு என்பது என்றும் வினாக்களையே தூண்டிடும். ஞானம் என்பதே அதற்கான விடைகளை நல்கிடும். ஞானப் பாதையிலே பயணிக்கத் துவங்கினால் அறிவானது செயல் இழக்கும். அறிவினைத் தூண்டி ஆன்மாவினை அறிவது கடினம். ஞானத்துணை ஒன்றே உயரியதாகும். ஞானமார்க்கத்தில் பயணித்து உயிரினை அடைந்து பின்னர் உயிரின் துணைக்கொண்டு பரமனையும், பரவெளியையும் அடைவதே உயரிய நிலை ஆகும். பயணத்தின் துவக்கம் என்பதே விழிகளிலே அமைந்துள்ளது.

விழிகளின் உட்படலங்களாகிய திரைகள் விலகினால் மாத்திரமே விழித்துகள் ஒளிப்பாதையினை உணர்த்திடும். விழித்துகளினையே மறைத்துள்ள திரைகள் விலகிட வேண்டும்.

இருள் விலகினால் ஒளியும், ஒளியும் கலப்புறும். எனினும், உயிர் கூடு எனும் ஏழாம் திரையும் விலகினால் மாத்திரமே உயர் எனும் ஒளியின் பயணம் துவங்கி பரம ஒளியினை அடையும்.

'விண்முகடு' எனும் ஓர் உயரிய திரையினை உயிரானது கடந்தால் மாத்திரமே ஈசனையும் அடைய இயலும்.

விழித்துகளும், ஒளிபொருந்தியதே உயிரும் ஒளி பொருந்தியதே. எனினும் விழிகளை மறைத்திடும் திரையும் உண்டு. உயிரினை மறைத்திடும் திரையும் உண்டு. இரண்டும் விலகினால் உள் விழிகள் கொண்டு உயிரினை தரிசித்திட இயலும். அந்நிலை என்பது அறிவிற்கு எட்டாத ஓர் உயரிய உணர்வு நிலையே என்று உணர வேண்டும்.

'கலியுகம்' எனும் காரணத்தினாலும், மாய ஒளிகள் உலகினிலே நிறைந்து உள்ள காரணத்தினாலும் ஈர்ப்பு நிலைக்கொண்டு செயல்புரியும் மானிடர்கள் உட்திரைகளை விலக்கி, உயிரினை தரிசித்து எல்லையினை அடைந்திட வேண்டும். பிறவா வரமும் பெற்றிடல் வேண்டும்.

Copyright © 2019 Gnanalayam

சூடேற்றி, குளிர்விக்கும் நிகழ்வின் மூலம் உட்திரைகள் யாவும் உருகிக் கரையத் துவங்கிடும். இருள் விலகினால் ஒளிபரவும். உட்பயணம் என்பது தெளிவுற இருள் விலகிட வேண்டும்.

'தீட்சை' என்பது வெளி நிகழ்வாய் ஆற்றிடும் செயலின் மூலமும், உள் நிகழ்வு என்னும் எண்ணங்களின் மூலம் ஆற்றிடும் செயல்களினாலும் உட்பயணம் செலுத்திட உதவிடும். மாதா, பிதா, குரு தெய்வம் என்ற உயர்படிநிலைகளைப் பணிவதன் மூலம் உள் நிகழ்வாய் திரைப் படலங்களின் பதிவுகள் நீங்கும்.

வெப்பமும், குளிர்ச்சியும் வெளிநிகழ்வாய் திரைகளெனும் அமிலக் கழிவுகளால் உருவான ஐவ்வுப் படலங்களை அழித்து ஒழிக்கும். 'தீட்சை' என்பது ஓர் துவக்க முயற்சியே ஆகும். தொடர் பயிற்சிகளே எல்லையினை எட்டிவிட உதவிடும்.

உணர்ந்து செயல்புரிந்தால் இறைநிலைகளை உணர்ந்து பிறவாவரம் பெற்றிடலாம். அன்றி அறியாமையில் உழன்றிட்டால் அழிவினை நோக்கியே பயணித்திட இயலும்.

உட்பயணம் தெளிவுறவே யாம் இத்தீட்சையினை வழங்குகின்றோம். தெளிவுற்றே பயன் அடையுங்கள். தீர்க்கமாய் செயல் புரியுங்கள்.

**************************

Gnanalayam